DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.104/2020**
Preliminary Register
Sessions
Deposition of witness for Prosecution அ.சா.2
Defence
Court

| | | |
|---|---|---|
| Name | : | கருப்பையா |
| Father/ Husband Name | : | ராமன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

2,5 மற்றும் 6வது எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டது. மற்ற எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of
**25.10.2023**
**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

1. நான் நேமத்தான்பட்டியில் குடியிருந்து வருகிறேன். தற்காலிகமாக பாலிடெக்னிக் கல்லூரியில் வேலை பார்த்து வருகிறேன். புகார்தாரர் எனது மகள். 1வது எதிரி எனது மருமகன். 2வது எதிரி அ.சா.1ன் மாமனார். 3வது எதிரி அ.சா.1ன் மாமியார். 4வது எதிரி அ.சா.1ன் நாத்தனார். 5வது எதிரி 1வது எதிரியின் 2வது மனைவி. 6வது எதிரி 5வது எதிரியின் தாயார். புகார்தாரருக்கும் 1வது எதிரிக்கும் 03.11.2006ம் தேதி குன்றக்குடியில் சண்முகநாதர் கோவிலில் இருவீட்டார் சம்மதத்துடன் உறவினர்கள் முன்னிலையில் திருமணம் நடத்தி வைத்தேன். திருமணத்தின் போது புகார்தாருக்கு 30 பவுன் தங்க நகையும், 1வது எதிரிக்கு 5 பவுன் தங்க நகையும் போட்டேன். மேலும் 1வது எதிரிக்கு ஹீரோ ஹோண்டா இருசக்கர வாகனத்தை ரூ.60,000/-ற்கு வாங்கி கொடுத்தேன். மேலும் எனது மகளுக்கு சீர்சாமான்களான வெள்ளி, பித்தளை, சில்வர், மற்றும் மரச்சாமான்கள் ரூ.2,00,000/- அளவில் வாங்கி கொடுத்தேன்.

2. மேலும் திருமணத்திற்கு ரூ.2,00,000/- செலவு செய்து திருமணச்சடங்குகளை செய்தேன்.பின்னர் 1 முதல் 4 வரையிலான எதிரிகளுடன் புகார்தாரர் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார். பின்னர் புகார்தாரர் திருமணத்திற்கு பிறகு 3 மாத கர்ப்பமாக இருந்தார். பின்னர் 1வது எதிரி வெளிநாடு சென்றுவிட்டார். பின்னர் 2 முதல் 4 வரையிலான எதிரிகள் புகார்தாரரிடம் கூடுதல் வரதட்சணை கேட்டு கொடுமை செய்துள்ளார்கள். அதை பற்றி புகார்தாரர் 1வது எதிரிக்கு செல்போன் மூலம் தகவல் சொன்னபோது 1வது எதிரி அப்படி தான் கேட்பார்கள் என்றும் நீ அதை கொடுக்க வேண்டும் என்று கட்டாயப்படுத்தி சொல்லியுள்ளார்.

3. புகார்தாரரும் எதிர்கால வாழ்க்கையை கருத்தில் கொண்டு வாழ்ந்து வந்தார். பின்னர் 30.08.2007ம் தேதி புகார்தாருக்கு முதல் பெண் குழந்தை தேவிகா என்பவர் பிறந்தார். 12.03.2013ம் தேதி இரண்டாவது பெண்குழந்தை தர்ஷினி என்பவர் புகார்தாருக்கு பிறந்தார். புகார்தாரருக்கும் 1 முதல் 4 வரையிலான எதிரிகளுக்கும் அவ்வப்போது பிரச்சனை நடந்து வந்தது. நான் அவ்வப்போது பஞ்சாயத்து செய்து புகார்தாரரை வாழ வைத்து வந்தேன். புகார்தாரரும் 1வது எதிரியின் வீட்டில் வசித்து வந்தார். 2 முதல் 4 வரையிலான எதிரிகள் 1வது எதிரியுடன் சேர்ந்து கொண்டு காரைக்குடி மின்சார வாரிய அலுவலகம் அருகே சொந்தமாக கடை வைக்க புகார்தாரரின் நகைகளை கேட்டுள்ளார்கள். புகார்தாரர் நகைகளை கொடுக்கவில்லை.

4. அதை காரணமாக கொண்டு புகார்தாரர் மற்றும் அவரின் குழந்தைகளை 1வது எதிரி விரட்டிவிட்டுள்ளார். அதனால் என் வீட்டிற்கு அவர்கள் வந்துவிட்டார்கள். 2013 முதல் 2015ம் ஆண்டு வரை 1வது எதிரி புகார்தாரரையும் அவரது குழந்தைகளையும் பார்க்கவில்லை எந்த உதவியும் செய்யவும் இல்லை. புகார்தாரரின் குழந்தைகளை படிக்க வைக்க வழி இல்லாததால் காரைக்குடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கேட்டு வழக்கு புகார்தாரர் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் புகார்தாரருக்கு ஆதரவாக ஜீவனாம்சம் கொடுக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5. 1வது எதிரி சித்திவயல் கிராமத்தை சேர்ந்த கலைநிதிபாண்டியன் மற்றும் அஞ்சலைதேவியின் மகள் 5வது எதிரி நீலவேணி என்பவருடன் கள்ளத்தொடர்பு வைத்து வாழ்ந்து வந்தார். இந்த நிலையில் புகார்தாரர் மற்றும் நானும் 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று குழந்தைகளை படிக்க

வைக்க கஷ்டமாக இருக்கிறது என்று கேட்டோம். அப்போது 1வது எதிரி புகார்தாரருடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று புகார்தாரரிடம் சொன்னார். மேலும் 5வது எதிரியுடன் தான் சேர்ந்து வாழ்வேன் என்று சொன்னார். 1வது எதிரி என்னையும், புகார்தாரரையும் திட்டியதால் வீட்டை விட்டு வெளியே வந்துவிட்டோம். 2 முதல் 6 எதிரிகள் 1வது எதிரி மூலம் எந்த உதவியும் புகார்தாரரின் குழந்தைகளுக்கு செய்யவிடாமல் தடை செய்துள்ளார்கள். 1வது எதிரி புகார்தாரர் மீது விவகாரத்து வழக்கு மாண்புமிகு தேவகோட்டை சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். மேற்படி வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

6. 2 முதல் 4 மற்றும் 6 வது எதிரிகள் ஒன்று சேர்ந்து கடந்த 03.03.2019ம் தேதி 1வது எதிரிக்கு 5வது எதிரியுடன் திருமணத்தை நடத்தி வைத்துள்ளார்கள். வெளியாட்களிடம் சொல்லாமல் 1வது எதிரி 5வது எதிரியுடன் மாலை மாற்றி தாலிகட்டி அவருக்கு வேண்டப்பட்ட நபர்களுக்கு சொல்லி 1வது எதிரியின் வீட்டில் திருமணம் நடைபெற்றுள்ளது. எனக்கு பழக்கமான சிவகங்கை மாவட்டம் கள்ளமணக்குடியை சேர்ந்த கருப்பையா மகன் பாண்டியன் என்பவருடன் நான் பேசிக் கொண்டிருந்த போது 17.10.2019ம் தேதி அன்றுஎன்னிடம் 1வது எதிரிக்கு 2வது திருமணம் நடைபெற்றது பற்றி என்னிடம் தகவல் சொன்னார்.

7. மேற்படி தகவலை புகார்தாரரிடம் சொன்னேன். அதன் பின்னர் நானும் புகார்தாரரும் 1வது எதிரியின் வீட்டிற்கு சென்றோம். 1 முதல் 4 வரையிலான எதிரிகள் இருந்தார்கள். அப்போது 5வது எதிரியுடன் கல்யாணம் எதுவும் செய்யவில்லை என வீட்டை விட்டு வெளியே போ என்று சொன்னார். அதன் பின்னர் கானாடுகாத்தானைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவரை தற்செயலாக 18.03.2020ம் தேதி அன்று சந்தித்தேன். அப்போது 1வது எதிரி மற்றும் 5வது எதிரிக்கும் காரைக்குடி அரசு மருத்துவமனையில் கடந்த 05.03.2020ம் தேதி அன்று ஆண்குழந்தை பிறந்ததாகவும் மருத்துவமனையில் அவர் பார்த்ததாகவும் என்னிடம் தகவல் சொன்னார்.

8. புகார்தாரரிடம் 1வது எதிரிக்கு குழந்தை பிறந்ததை பற்றி தகவல் சொன்னேன். அதன் பின்னர் 1வது எதிரியின் வீட்டிற்கு நானும் புகார்தாரரும் சென்றோம். அப்போது 5வது எதிரி கைக்குழந்தையுடன் இருந்தார். அப்போது 1வது எதிரி வீட்டில் இல்லை. மற்ற எதிரிகள் அனைவரும் அங்கு இருந்தார்கள். அப்போது 1வது எதிரி எப்படி 2வதாக கல்யாணம் செய்வார்

என்று 5வது எதிரியிடம் கேட்டார். அப்போது 5வது எதிரி நான் விருப்பட்டு தான் 1வது எதிரியை கல்யாணம் செய்து கொண்டேன். எனக்கு குழந்தை பிறந்துவிட்டது. என்னை ஒன்னும் செய்ய முடியாது என்று சொன்னார். 2 முதல் 4 மற்றும் 6 வது எதிரிகள் ஒன்று சேர்ந்து நாங்கள் தான் திருமணம் செய்து வைத்தோம். இனிமேல் நீ வீட்டு வரக்கூடாது என்று தகாத வார்த்தையால் திட்டினார்கள். பின்னர் மனவேதனை பட்டு காரைக்குடி மற்றும் தேவகோட்டையில் உள்ள அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் மனு கொடுத்தோம். அவர்கள் 2வது திருமணம் செய்வதற்கு வழக்கு போட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். என் மகளை 1வது எதிரி சேர்ந்து வாழ வேண்டும் என்றும் திருமணத்தை நடத்தி வைத்த 2 முதல் 4 மற்றும் 6வது எதிரிகளை தண்டித்தும் தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். 1 மற்றும் 5வது எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.